174



926: 38.24 KP
180621

உ

முருகன் துணை.

குமாரெட்டயபுரம் என்று பேர் விளங்கிய

குழந்தாபுரி.

ஸ்ரீ பாலசுப்பிரமணியக் கடவுள்மீது,

தோத்திரப் படந்தம்.



கூடல்குடி,

வித்வான் S. கந்தசாமிபிள்ளை,

அவர்களால் இயற்றப்பெற்றது.

தூத்துக்குடி,

வி. ஆர். மோத்தா அன் சன்

அருணோதயம் பிரிண்டிங் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.


18671

உ

முருகன் துணை.

விநாயகர் துதி

வெண்பா.

கைவைத்த வேற்குழந்தை கண்ணுதலாரீன்றமணிச்
செய்வைத்திருக்குழந்தை செங்குழந்தை, யையன்மிசை
சக்திவிசைத் தண்டமிழைத் தந்துதவுமந்தவொரு
கற்பவிசைத் தந்திமுகன் முன்.

மணிகொண்டபாலாழிமிசை யொளிர் பணடவி
மணிப்பாயன் மீதுசெங்கண்
வளருமுகிலும் புவனமெல்லாம் படைத்தசது
மறைநான் முகக்கடவுளுந்
தினிகொண்ட நான்மருப்பயி ராவதத்துலவு
சிந்தா மணிக்கை யனுஞ்
செப்பரிய முப்பத்துமுக்கோடி தேவருஞ்
சித்தர்வித்தியா தரர்களுஞ்
பணிகொண்டு பலர்தூயிருபதம் பரவவருள்
பாலிக்கு மோனவடிவே
பகர்தூரிய முடிவினடமிடுகின்ற சோதியே
பத்தரொடு கூட்டுகண்டாய்
அணிகொண்ட மடவாளை நதியெங்கும் விளையாடு
மழகார் குழந்தை நகர்வாழ்
ஆதிமுடி வானசிவ சோதிவடி வானகுரு
ஆறுமுகமான பொருளே.

ஆணவமூலத்தினதமூலமும் புலக்காட்டையோ
ராறெழுத் தோசசிவெட்டி
அறிவென்னு மூழபடைகொ டாழமாயுழுதுமெய்
யன்பு நீர்பாய்ச்சி மறைநூல்
காணியமோன மாம்வித்தை விதைத்தறபகைக்
களையெடித்துத் தவிசிக்
கரடற்றஞானச் செழும்பயிர் விளைத்திடக்
கருணைமழை பொழியுமுகிலே
பேணுமடியவருளங் குடிகொண்ட தெய்வமே
பேசரிய வேதமுடிவே
பெற்றதாய் தந்தையருமற்றுநீ யுற்றவென்
பிழைபொறுத்தாட்கொள்வையே
ஆலிப்பொன்வி சுதச்சிகரகோபுர மிலது
மழநார் சூழ்ந்தைநகர்வாழ்
ஆதிமுடி வானசிவ சோதிவடி வானகுரு
ஆறுமுகமான பொருளே. 2.

பாழானமூடமன மேபுனைந் தொருபுத்தி
பகருவேளிரவுபகலாப்
பம்பர மெனச் சுழன்றோடோடி நீ கண்ட
பயனென்கொல் விருதாவிலே
காழாதிகாள்வரையு மந்தோவிதிற்பட்ட
சங்கடமனந்தமின்னுஞ்
சகவாழ்வுசகவாழ்வெனக்கருகினாலேவரு
சண்டனுக்கியாதுபகர்வாய்
வீழாதுநீயுய்யவேண்டிலொரு தந்திரம்
விளம்புவேன் வடிவேலனே

மெய்த்தெய்வமென்றுபணியுயவுண்டெனக்கூறி
மெய்யர் பணி சைவ மணியே
ஆழிபுனைபவர்தங்கை திருமங்கைகுடிகொண்ட
அழகார் குழந்தைநகர் வாழ்
ஆதிமுடி வானசிவ சோதிவடி வானகுரு
ஆறுமுகமான பொருளே. 3.

தேகாதி பிரபஞ்சமித்தையென்றறிஞருரை
செப்பிடக்கேட்டேனினுந்
தேகமியார் தேகியார் நானென்பதியாரெனத்
தேகிகன் றனையடைந்திங்
காகமுணர்க் கரியபெரிய சாதனவழியி
லற்பமும் பழகியறியேன்
பையமறவே தெளிந்துய்யுமெய்யன்பர் பால்
அன்பிலேனின்பமெனவே
மோகவாதனையற்று மின்னுர்மயற்சலதி
முழ்கிக் கிடந்திடைந்தேன்
முத்திவித்தானசிவ பத்தர் முட்டாதுபணி
முத்தனைக்காருபாலனே
ஆகுசைலையுறைம் பிக்கினைய தம்பியே
அருள்வாய்கு முந்தைநகர்வாழ்
ஆதிமுடி வானசிவ சோதிவடி வானகுரு
ஆறுமுகமான பொருளே. 4.

கரியவரை யனையபெரு வெங்கட் கடாவி னெம
காலதூதுவர் வருமுனே
கண்பஞ்சடைந்து வலுநெஞ்சஞ் சடைந்து பால்
கடை வாயினிழி தருமுனே

அருமை மனிவியர் புதல்வர் சுதறிவிழ்ந் தழுமுனே
ஐவர்த்து மெலிமுனே
ஆறுமுக முங்கருணைகூர் விழிகளுந் திலக
மனிதுதலு மணிமகுடமு
மருவளர் தடம்புயமு மாறிரு காங்களு
மலர்ப்பாதமுந் துலங்க
வருமயி லு மிருமயி லு மொருமயிலிலங்க வொரு
மயிலேறி வந்தாளுவாய்
அரிபிரமன மர்முனி வரர்பணியு மகிமைமிகு
மழகார் குழந்தை நகர்வாழ்
ஆதிமு டவானகிவ சோதிவடி வானகுரு
ஆறுமுகமான பொருளே. 5.

அஞ்சலென் றரிபிரமனமரர் முதலேணேயோர்க்
கபயத்த மீந்தறவர்பா
லன்பிணைதந்த சிந்தாமணிச்சுடர் பொரு
தங்கி வருகங்கை தனினீள்
செஞ்சர வணத்திடைவிடுத்த பொழுதோராறு
சேயெனவுதித் திமயமான்
சென்றெடுத்திட வடிவமொன்று பெற்றமுதனுஞ்
சின்னக்குழந்தை வயதிற்
கஞ்சனைச் சிறையிலிட் டெந்தைக்கு மந்திரங்
கற்பித்த வற்புத குரா
காரவனை நீறுபடவேல் கடவுமைபனே
யைவிடல முதாழுகுசீர்
அஞ்சொலிள வஞ்சியர் நடஞ்செய் தடமுஞ்சலவு
மழகார் குழந்தை நகர்வாழ்

ஆதி முடிவானசிவ சோதிவடிவான குரு
ஆறுமுகமான பொருளே. 6.

பதியினிலே யுணராத பதனெனவே தோதா
படைத்ததிற் பயனென்ன யான்
பாழிற் பிறந்தென்ன கற்றென்ன கேட்டென்ன
பார்மகட் கொருபாரமே
மதியிலா தவனேயு நன்மதியிலா தவனுக
வாழ்வித்தனிற் கருமையோ
மட்டிமக வெனிலன்னை விட்டிடுத னீதியோ
வானுடுகாத்த தரையே
கதியென்று நம்பினேன் கைவிடே லபயமின்
கருணாகர விதுசமயமே
கட்டவுணர் பட்டருள விட்டவடி வேலவர் 18067
காரோசை மாரோசைகொண்
டதிருநான் மறையோசை விழவோசை மிகுமலியு
மழகார் குழந்தைகர் வாழ்
ஆதிமுடி வானசிவ சோதிவடி வானகுரு
ஆறுமுகமான பொருளே. 7

பவளவரையிற் படருமரகதக் கொடியன்னை
பச்சிளங் கொங்கைவார்த்த
பாலமுத முண்டகனி வாயனே தூயர்பணி
பன்னிருகரத் தையனே
கவளமயில் யானைமுகனுக் கினியதம்பியே
கலியுக வரப்ரசாதா
கன்றுக் கிரங்குமொரு சேதாலெனக் கொடிய
கன்னெஞ்சனுக் கருள்வையே

தவளநீ றக்குமணி புனையடிய ருள்ளமிசை
தட்டற நிறைந்த சுடரே
தனுகரணபுவன போகங்களாய் மறைபரவு
சச்சிதானந்த வடிவே
அவுணர்குல கலகனே அமரர்குல திலகனே
அழகார் குழந்தைநகர் வாழ்
ஆதிமுடி வானசிவ சோதிவடி வானகுரு
ஆதிமுக வான பொருளே. 8

எக நாயனே இமையவர்க்கரசே
எல்லார் குழலிய ரீருவர்
போகநாயகனே புண்ணிய மூனிவர்
போற்று தற்குரிய மெய்ப்பொருளே
சோகுசேர் மனத்த னுயினுன்னைத்
தஞ்ணையென நம்பினே னருள்வாய்
மாகமார் மதில்சூழ் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேலவனே. 1

நோதிலா வமுதே குணப்பெருங்குன்றே
குணங்குறி கடந்த சின்மயனே
பூதிசா தனர்க ளுளத்தடம்பூத்த
பூந்துணர்க்கற் பகமலரே
ஆதியாய்நடுவா யந்தமாய்நிறைந்த வப்பனே
சமயமீ தருள்வாய்
மாதவர் போற்றுங் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேலவனே. 2

கற்பகக் கனியே வொப்பிலாமணியே
கண்களீ ராறுடைக் கரும்பே

வெற்புறழ் தடக்தோள் பொற்புறச்சுடரும்
வேலவா விளங்கிழை யிருவர்
கற்புலா மனத் திற்சிக்த பூங்கனியே
கதியுனையன்றி வேறுளதோ
மற்குலாந் தெய்வக் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேல்வனே. 3

அருணனேர் மகுடமைந்தொளிர்சிரமும்
அழகுற விளங்கு சண்முகமுங்
கருணைகூர் விழியுங் குழையணி செவியுங்
கரங்களுங் கடம்பணி புயமுந்
தருணவாடகப் பொற்கிலம்பொடு சிவந்த
சரணமுந் துலங்கிட மயிலின்
வருகவிச் சமயங் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேலவனே 4

கற்பனை கடந்த சிற்பர வொளியே
கறைமிடற் றெந்தையார்மகிழச்
சொற்பொருள் விரித்த தோன்றலே
தோன்றுத் துணையென நிறைந் தருள்சுரக்கு
மற்புதச் சோதியலை திகழ்கடலே
அண்ணலே கைவிடே லபய
மற்சரந் தீர்த்தாள் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேலவனே. 5

என்னையாளுடையாய் சொன்னியாறுடையா
யேடவிழ்தூய தாமரைக்கை
பன்னிரண்டுடையாய் பன்னிரண்டுடையாய்ப்
பாவியே னுய்யுமாறருளே.

அன்னமும் பாலுமாடையும் பிறவும்
அருந் தவர்க்களித் தணிசோலை
மன்னுசீர் செல்வக் குழந்தையம் பதியின்
மருவிய குழந்தை வேலவனே 6.

விதிக்கொரு விதியும் வினைக்கொரு வினையும்
விடுத்திமையவர்க் குயர்வீடுங்
கதிக்கொரு கதியுமளித்த சண்முகனே
கடம்பணி தடம்புயக் காரே
மதிக்கொரு மதியன்றருளு மெம்மிறைவன்
மஞ்சனே தஞ்சமென் றடைந்தேன்
மதிக்குயர்மாடக் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேலவனே. 7.

என்னிரு கண்ணே கண்ணினுண்மணியே
எண்ணிலாவுல கெலாமீன்றுங்
கன்னியென்றின்னு மன்னுயிர்போற்றுங்
கவுரியீன்றளித்த கற்பகமே
கன்னலும் பாலுமமுதமும் பொருவுங்
கவித்தொடை விருப்பொடு புனையும்
வன்னமற் புயத்தாய் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேலவனே. 8.

துப்பிதழ்மடவார் மயலிடை தோய்ந்து
தூநறவின் மிழலைபோல்
இப்புவி வாழ்வை யினிதெனக் கருதும்
ஏழையன் சுழல்வரு வண்ணங்
கைப்படு கனியாமென நினதருட்கண்
காடுவாய் தோட்டலர் கமழ்கா

வைப்புயல் சூழுங் குழந்தையம்பதியின்
வளர்ந்தொளிர் குழந்தை வேலவனே. 9.

என்பு தோனரம்பு கொழுந் தசையிரத
மிசைவுறு புழுமலி குடம்பைப்
புன்புலால் யாக்கை நிலையென வாழாப்
போக்கிய சேய்க்குயு மார்க்கம்
அன்பினுடிசைந் துன்னருள் புரிகுவையோ
அரும்பவிழ் சுரும்பிசை பயிலு
மன்பெருஞ் சோலைக் குழந்தையம்பதியின்
மருவிய குழந்தை வேலவனே. 10.

திருப்புகழ்.

திருவுற் றிலகிய பிறையைப் பழகிய
சிலையைப் புரைதுதல் லயிலைப் பொருவிழி
செகமெச் சிடுமொழி வரையைப் பொருதன மடமானார்

திருவிற் றிருகின லறிவைப் பயனறு
செயலிற் செலவிடு மடிமைக் கடியவர்
தெரிசித் திடுபத முதவத் தருணமி தருள்வாயே

மருதப் பணையொடு மதுரத் தமிழ்வளர்
மதுரைக் கதிபதி மகளுக் குறுகுறை
மறையைக் குணகடல் குடையப் புதுமதி நிகராக

வளரத் திருமுக மருள்மு தத்தயசம
ணமரக் கழுவினி வருவித் துறையெதிர்
மடலிற் றமிழ்மறை யெழுதிச் செலவிரி றிறலாளா

கருதித் தொழுமது மகளுக் காணுறு
கயிலைப் பதிபுக வருள்வித் தருகட
கரிமுக் கணனிளை யவரத் தணிகரன் முதலான

ககனத் தரசிய னிலகெட் டிடவரு
மவுணர்ல் கரிசூர கரிதற் குறுமகன்
களபத் திரடன யிளகத் தழுவிய புயவீரா

குருமுத் துயிர்கழ னியினிற் கடைசியர்
குழலைப் புயலென மருளக் குயிலிசை
குழையப் புயலொலி மருவத் தவில்முர சதிர்கோயில்

குலகிக் குறுமுனி வருடத் தொருமுறை
பரசிப் பணிவள மலிசற் சனருறை
குமரெட் டயிலர் மருவித் திருவருள். பெருமாளே (1)

மாமுகினி றத்தகுள
னீள்சிலது றற்பவள
வாய்தவள முத்தநகை குரினுசி

வாள்விழிக துப்பிருக
ணுடிசெவி கத்தரிகை
வார்பொருக னத்தன மடமானர்

காமவலை யிற்ழலு
மேழைமதி யெற்குளிரு
காமர்கம லப்பதம தருள்வாயே

காளியி னித்தமுரு
காவெனநி னைப்பவர்மெய்
காணுவர்ப தத்தையென றுறையோது

ஒமெனும றைப்பொருள
ரீசனுண ரச்செவியி
லோதியரு லட்சணப ரிருவாகு

சென்னை-600 095.

ஊமைவணி கச்சிறுவ
ஞமெனம லேத்தபுல
வோர்தெளிவு றப்புரியு மூபகாரா

மாமதிக டத்தலரி
தாமெனவ ணிக்கதவ
வாயில்வழி புக்குடல மதுமீளும்

மாடமலி மிக்கவள
நீடுகும ரெட்டபுரி
மாநகரி லுற்றசுரர் பெருமாளே (2)

கொண்டலு மண்டிரு ளும்பொழி லும்பொரு
கொண்டைய ழிந்துகு லைந்துட லைந்திட
கொண்டிட மஞ்சமு லைத்துசி தைந்திட மலர்மாலை

குங்கும கந்தக தம்பம ணிந்தெளிர்
பைம்பொன் வடம்புனை குன்றுற ழுந்திரள்
கொங்கைக ளுதிர்ந்து குழைந்திட கொந்தைட மிகவாட

வண்டணி செங்கைச லஞ்சல மென்றணி
தண்டைசி லம்புல லம்பநெ டும்புரு
வங்கள்வ ளைந்திரு கண்கள்சு ழன்றிட மயன்மீறி

மங்கையர் தங்கணி தம்பமெ னும்படி
புண்குழி யின்கண்வி ழுந்திர தங்கள்வ
டிந்திட விஞ்செரு கர்ந்தரு மங்கென மருளாமே

குண்டெ டுங்கட லுண்டபெ ருந்தவ
னுய்ந்திட வண்டக ருங்கெட வும்புலி
கும்பிட முன்பத பங்கய மும்பெற வருள்வாயே

கொந்தலர் மங்கைபி ரிந்திட நொந்தனு
மன்றுளே கொண்டசு டன்றனெ வென்றில
கும்புவி தம்பிகெ டும்படி தந்தவன் மருகோனே

குண்டுணியுங் கொலை யும்புலை யும்புரி
மண்டவு னுருக்கிளை யுண்டவ லுக்திகள்
குன்றும் றும்படி யன்றயி லுந்திய புயவீரா

கொஞ்சிகு மஞ்சலு மிஞ்சியு மிஞ்சிகெ
ருங்கிவ ளைக்குது முன்தைவ ளைம்பதி
கொண்டிரை த்தருசு கந்தரு மண்டர்கள் பெருமாளே (3)

மணியில கியபல பணிகை விட்டின
மயிலிய லனாடை குயின்மொழி, கற்றணி
மணிநகை சிறிதெழு முருவல்ப ரப்பியு மயில்போலே

வரிநிகர் நெடுவிழி வலையின்ம ருட்டியு
மதவெறி யெழவித ழமுதம ருத்தியு
மலைபொரு மிருதன மருவலி தத்திடு மடமானர்

அணிவரு மிளமக வடிமைக, கட்டெரு
தரண்மனை வயனில மாதன வைப்பக
ளவனிமு ழுதுமொரு குடையி ழற்படு புவிவாழ்வு

மமர்கர தலசல மிளமைகெ டக்கெட
ரைதிரை புன்மல சலமொழு கச்சிர
மசையந னைடகெட வொருகைத னிற்றடிட யோடுமேவி

கணமணி யெனுமொழி கிழலவி ணைத்தொடர்
முடியவ லிமபடா முடுகிவ லித்துயர்
கவர்பொழு தினையல தெவர்தினை யற்புத வடிவேலா

கவியுக வரதவி சாணவி தெதிர
கவிபுனை மிரன்புய னிவையுமை யுச்சயி
கவுரியு தவசுத விகித மத்தின மொளிர்தோகைப்

பிணிமுக மிசை திசை யதிரந டத்திய
னிருகர பரவடி யவர்கள்வி ருப்பொடு
பிழிமது மலர்சொரி தரவரு மற்புத வரவேணும்

பிணைவிழி மடவியர் தவகும ரெட்டிய
புரமரு வியசெவ சுதகுக வுத்தம
பிறைமரு வியசடை யவரருள் சித்தர்கள் பெருமாளே.

முற்றிற்று.

18671

R26138.2 11KP
N25